கேட்கப்பட்டது. அதைப்பற்றி விவரம் தந்திருக்கிறேன். இப்போது விமானப் போக்குவரத்து பற்றிக் கேட்கப்படுகிறது. அதற்கான விவரங்களை, தனிக் கேள்வி போட்டால், இந்த சபையில் தெரிவிக்க அரசு தயாராக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : ஜனதா ஓட்டல், ஜனதா ரெயில், ஜனதா பயணம் என்பது போல ஜனதா விமானப் பயணம் என்று வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நாம் எல்லாம் ஜனதா விமானப் பயணம் போவோமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : விமானப் போக்குவரத்தில் இங்கிருந்து 100 பேர், 50 பேர் என்று போவதற்குப் பதிலாக, 5 பேர் அல்லது 10 பேர் என்ற அளவிலே ஏற்றிப்போகின்ற சிறிய விமானங்கள், குறைந்த தூரங்களுக்குச் செல்கின்ற அளவுக்கு, நிரந்தரமான விமான வழிகளில் இல்லாமல் இருக்கின்ற பகுதிகளுக்குச் செல்லும் விமானப் போக்குவரத்து அமைக்க வேண்டும். சென்னை, சிதம்பரம், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, கன்னியாகுமரி என்று போகின்ற சுற்றுலா பயணிகளுக்கு வசதியாக இருப்பதற்கு அந்தத் திட்டம் உருவாகிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புலவர் புதுமைப் பித்தன் : இப்போது ஜனதா ஓட்டல் என்று அழைக்கப் படுகிறது. இந்த அரசு எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று இருக்கின்ற அரசு. ஆகவே, அந்தப் பெயரையும் தமிழ் படுத்தவேண்டாமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறந்த தமிழ்ப் புலவர். தமிழ் கவிஞர். அதற்காக நல்ல தமிழ்ப் பெயரைச் சொன்னால், அவர்களே உருவாக்கிய அந்தப் பெயரை வைக்க இந்த அரசுக்கு தடையேதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Orchard.

*173 *Q*.—THIRU V. R. PERIANNAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to start an orchard at Kolli Hills through the Agricultural University, Coimbatore; and

(*b*) if so, the extent of acres in which it will be formed?

1978 மார்ச் 15]

பழத்தோட்டம்

திரு. வி. ஆர். பெரியண்ணன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கொல்லி மலையில் கோவை விவசாய பல்கலைக் கழகம் மூலம் பழத் தோட்டம் ஏற்படுத்தும் குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் பரப்பளவில் ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) அம்மாதிரி செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசிலனையில் இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : நம் விவசாயப் பல்கலைக் கழகம் மூலம் பழத்தோட்டம் ஏற்படுத்தி, பழ வகைகள் உற்பத்தி செய்வதற்காக வாய்ப்புகள் இருப்பதாகவும், அதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் பத்திரிகைச் செய்திகளில் பார்த்தேன். அதை விரைவுபடுத்த அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். விவசாயப் பல்கலைக் கழகத்தோடு தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்துவார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதுபோல, அரசுக்கு எந்தத் தகவலும் இல்லை. அதைப்பற்றித் துணை வேந்தர் எங்காவது சொல்லியிருந்தால், அதைக் குறித்து அரசு கவனிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Farmers Growing Betel-Vines.

* 174 *Q.*—THIRU A. DRAVIDAMANI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Committee which has been set up to study the problems of farmers, will consider all the problems regarding agriculture;

(*b*) if so, whether the problems of farmers growing Betel-Vines also will be considered; and

(*c*) whether a member who has experience in Betel-Vines cultivation will be included in that Committee?